திரு. பி. வேலுசாமி : பழத்தோட்டங்களிலே ஜனங்களுடைய உபயோகத்திற்கு பழம் கிடைக்கும் அளவில் வந்திருக்கிறது எத்தனை எக்கர்கள், வெறுமனே இருப்பது எத்தனை எக்கர் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1966–67-ல் 1,477 எக்கரிலேயும், 1967–68-லே 1,698 எக்கரிலேயும் பழத் தோட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

பவானி வட்டத்துக் காடுகளிலுள்ள தரிசு நிலங்கள்

*169 வினு.—**திரு. ஈ. எம். நடராசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானி தாலூகாவில் தரிசாகக் கிடைக்கின்ற பாரஸ்ட் நிலங்கள் எவ்வளவு ?

(இ) அவற்றை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) பவானி வட்டத்தில் உள்ள ஒதுக்கக் காடுகளில் தரிசு நிலம் எதுவுமில்லை.

(இ) நிலமற்ற ஏழை உழவர்களுக்குக் காட்டு நிலத்தை ஒப்படை செய்யும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

திரு. ஈ. எம். நடராசன் : சார், பவானி தாலூகாவில் ஃபாரஸ்ட் நிலங்களைத் தங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஏழை விவசாயிகள் மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். நிலமற்றவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்க உதவி செய்ய சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படிப்பட்ட விண்ணப்பம் வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. ராமச்சந்திரதுரை: தலைவர் அவர்களே, பொதுவாக ஃபாரஸ்ட் தரிசு நிலங்களில் பல பகுதிகளில் யூகலிப்டஸ் போடுகிறார்கள். இன்னும் சில இடங்களில் சவுக்குப் போடுகிறார்கள். எங்கள் பகுதியில் முந்திரி போட்டிருக்கிறார்கள். அந்த அந்த கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள, கிராம மக்கள் கட்டுப்பாடாக இருந்து, 10,000 ரூ. பெறுமானமுள்ள வற்றை 1,000, 2,000 என்று எடுத்து விடுகிறார்கள். அதனால் அரசாங்கத்திற்குப் பணம் வீணாகிறது. தனிப்பட்ட ஒரு ஆள் அடித்துக்கொண்டு போய் விடுகிறார். ஆகவே, அவற்றைப் பட்டா நிலமாகச் செய்து கொடுத்தால், உணவு உற்பத்திக்கும் வசதியாக இருக்கும். அதைச் செய்ய சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : யூகலிப்டஸ் செடியோ, முந்திரி செடியோ, காட்டிலாகாவினரே தான் நடுகிறார்களேயல்லாது, தனிப்பட்டவர்களுக்கு அனுமதி கொடுப்பதில்லை. அங்கத்தினர் சொல்வது போல, பட்டா செய்து கொடுக்கக்கூடிய திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. ஏற்கெனவே நிலம் இருக்கிறவர்களுக்கு மேலும் அரசாங்கத்தின் சொத்தைப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் இடம் கொடுக்காது.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திலும் காட்டு நிலங்கள் இவ்வளவு இருக்க வேண்டும் என்று காட்டு இலாகா ஏதாவது வரையறை செய்திருக்கிறதா ? அப்படி வரையறை இருந்தால், நம்முடைய காட்டு இலாகா நிர்வாகத்தில் எவ்வளவு நிலம் இருக்கவேண்டுமென்று அரசு வரையறை செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒரு நாட்டின் மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காட்டு நிலமாக இருக்கவேண்டும். துரதிருஷ்டவசமாக மொழிவழி மாநிலம் அமைந்த காரணத்தால், காடுகள்

1968 ஆகஸ்ட் 28]

எல்லாம் நம்மை விட்டுப் போய்விட்டது. வேறு சிலர் வேண்டுமென்றே இருந்த காட்டுப் பகுதிகளை அழித்துவிட்ட காரணத்தால் நம்முடைய மாநிலத்தில் காடுகள் குறைந்துவிட்டன.

பூந்தமல்லி பத்திரப் பதிவாளர் அலுவலகம்

*170 வினா :—**திரு. கே. சகாதேவ கண்டர் :** மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி சப்-ரிஜிஸ்தராராபீசை சென்னை தலைமை மாவட்ட செயலகத்தோடு இணைக்காமல் காஞ்சிபுரம் தலைமைச் செயலகத்தோடு இணைத்தது பொதுஜனங்களுக்குப் பாதகமாய் உள்ளது என்று அந்த வட்ட பொதுஜனங்களிடமிருந்து மகஜர் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம், எனில், அரசு அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) பூவிருந்தவல்லியில் உள்ள உதவிப் பதிவாளர் அலுவலகத்தை காஞ்சீபுரம் பதிவு மாவட்டத்திலிருந்து, சென்னைப் பதிவு மாவட்டத்திற்கு 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் மாற்றுவது குறித்த ஆணைகள், வருவாய்த் துறையின் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் தேதியிட்ட 908-ம் எண் அரசாங்க ஆணையில் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. கே. சகாதேவ கண்டர் : தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியில் உள்ள சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசை, காஞ்சீபுரத்துடன் இணைக்காமல், சென்னையுடன் சேர்த்தால் அந்த வட்டார பொது மக்களுக்கு நன்மையாக இருக்கும். போக்குவரத்து வசதிக்கும் ஏற்றதாக இருக்கும். ஆகவே, இதைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கோரிக்கையை அந்தத் தொகுதி எம். எல். ஏ. அவர்கள் தலையிட்டு அரசைக் கேட்டுக்கொண்டதன் மேல், உடனடியாக மாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

Clash between warders and prisoners.

*171 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Minister for Law and Co-operation be pleased to state :—

(*a*) whether there was a clash between the warders and prisoners in Tiruchirappalli Central Jail on or about the 26th of February 1968 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழுவதற்கில்லை.

குடும்பக் கட்டுப்பாடு

*172 வினா.—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மாதம் இரண்டு பேர்களைக் கொண்டு வர வேண்டும் என்று ஆணை ஏதேனும் தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.